அரசாணை நகல்

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

கட்டிட அனுமதி – புராதன நகரங்களில் கட்டிட அனுமதி வழங்குதல் – அரசு ஆணைகள் இரத்து செய்தல் மற்றும் உயரக் கட்டுப்பாடு விதித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (நிதி.1) துறை

அரசாணை (நிலை) எண்.22 நாள்: 30.01.97

1. அரசாணை (நிலை) எண். 163 நிதி & கு.வ. துறை நாள் 06.07.93.
2. அரசாணை (நிலை) எண். 191 நிதி & கு.வ.துறை நாள் 18.07.94.
3. அரசாணை (நிலை) எண். 233 நிதி & கு.வ.துறை நாள் 27.11.95
4. அரசாணை (நிலை) எண். 234 நிதி & கு.வ. துறை நாள் 27.11.95

ஆணை:

ஸ்ரீரங்கம் நகரத்தில் ஸ்ரீரங்கம் கோவில் சுற்றுச் சுவரிலிருந்து 1கி மீட்டர் சுற்றளவுக்குள் கட்டப்படும் கட்டிடங்கள் தரை மற்றும் முதல் தளம் சேர்ந்து உயரம் 9 மீட்டருக்குள் இருக்க வேண்டும் என்றும், இந்த வரையறைக்குட்படாத அதாவது 1 கி மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள கட்டிடங்கள் உட்பட அனைத்து கட்டிடங்களுக்கான விண்ணப்பங்களும் அரசுக்கு பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அரசாணை நிலை எண்.233 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள்.27.11.95ல் உத்தரவிடப்பட்டது. 27.11.95 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை எண்.234–ல் ஸ்ரீரங்கம் நகரத்தைப் போலவே மற்ற இணைப்பில் கண்ட புராதன நகரங்களில் கட்டப்படும் கட்டிடங்களை முறைப்படுத்துவதை கருத்தில் கொண்டு மற்ற புராதன நகரங்களுக்கும் அவைகளின் தனித்தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு விதிமுறைகளை முடிவு செய்து அரசுக்கு பரிசீலனைக்கு அனுப்புமாறும் மேற்கண்ட முறைகளை முடிவு செய்யும் வரை எல்லா புராதன நகரங்களுக்கும் கட்டிட அனுமதி கோரும் செயற்குறிப்பினை அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறும் நகர் ஊரமைப்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேற்படி ஆணைகளின்படி புராதன நகரங்களில் கட்டக்கூடிய கட்டிடங்களுக்கென அனுமதியை அரசிடம் பெற வேண்டும் என்பதில் நடைமுறையில் ஏற்படுகிற பல சிக்கல்களையும் காலதாமதங்களையும் பொதுமக்களுக்கு ஏற்படுகிற பிரச்சனைகளையும் தவிர்க்கும் பொருட்டு மேற்படி அரசாணைகளை இரத்து செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்தது.

3. பரிசீலனைக்குப் பின் மேலே பத்தி 1–ல் கூறப்பட்டுள்ள அரசாணைகளை அரசு இரத்து செய்கிறது. மேலும் இணைப்பில் கண்டுள்ள 38 புராதன நகரங்களிலும் புராதன கோவிலின் சுற்றுச் சுவரிலிருந்து 1 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் கட்டப்படும் கட்டிடங்கள் (தரை தளம் மற்றும் முதல் தளம்) 9 மீட்டர் உயரத்திற்கு மிகாமல் கட்டப்பட வேண்டும் எனவும் இந்தக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் கட்டிடங்களுக்கான அனுமதியை வழங்கலாம் எனவும் அரசாணை பிறப்பிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி,
அரசு செயலாளர்

பெறுநர்
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை – 2.

உண்மை நகல்

இணைப்பு:–

அரசாணை நிலை எண்.22 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் 30.1.97.

1. காஞ்சிபுரம்
2. சிதம்பரம்
3. ராமேஸ்வரம்
4. ஸ்ரீரங்கம்
5. திருவில்லிபுத்தூர்
6. மாமல்லபுரம்
7. தஞ்சாவூர்
8. கும்பகோணம்
9. கங்கைகொண்ட சோழபுரம்
10. பூம்புகார்
11. மதுரை
12. பழனி
13. திருச்செந்தூர்
14. திருத்தணி
15. கன்னியாகுமரி
16. திருவண்ணாமலை
17. செஞ்சி
18. செட்டிநாடு
19. வாலிநோக்கம்
20. தரங்கம்பாடி
21. நாகூர்
22. வேளாங்கன்னி
23. குற்றாலம்
24. ஸ்ரீபெரும்பூதூர்
25. திருநெல்வேலி
26. திருச்செங்கோடு
27. காரைக்குடி
28. பேரூர்
29. பவானி
30. பிச்சாவரம்
31. மருதூர்
32. குறிஞ்சிப்பாடி
33. திருமயம்
34. சித்தன்னவாசல்
35. ஆவுடையார்கோவில்
36. பத்மநாபபுரம்
37. குளச்சல்
38. மரக்காணம்

எஸ்.மாலதி,
அரசு செயலாளர்.

உண்மை நகல்